DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC No. 325 / 2025
Deposition of PW1/ LW1

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. வேல்தாய் |
| Father's Name | : | மலைச்சாமி |
| Village | : | வாய்க்கால்பாறை |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | கூலி |
| Religion | : | இந்து |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28.07.2025.
எதிரி ஆஜர் .

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் துரைச்சாமிபுரத்தினை சேர்ந்தவர். சம்பவ சமயத்தின் போது ஆஜர் எதிரி என் வீட்டிற்கு அருகே குடியிருந்தார். என் கணவர் 10 வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்டார். என் கணவர் இறந்ததில் இருந்து விஷேசத்திற்கு நான் செல்லும் போதெல்லாம் என்னிடம் ஆஜர் எதிரி என்னுடன் சந்தோசமாக இரு என்றும், ஒரு நாளேனும் உன்னை தொடாமல் விடமாட்டேன், உன் உடம்பை பார்க்காமல் விடமாட்டேன் என்றும் கூறிவந்தார்.

2. கடந்த 27.01.2019 ம் தேதி மாலை 6.00 மணியளவில் வாய்க்கால்பாறை , பச்சைமலைக் கோவில் விஷேசத்திற்காக நான் சென்றிருந்த போது இங்கு ஏன் நீ இருக்கிறாய், இங்கு வைத்து உன்னை நான் தொடமுடியாது நீ துரைசாமிபுரத்தில் உள்ள உனது வீட்டிற்கு வா வீட்டிற்கு வா என்று சொன்னார். நான் அப்பொழுது என் அப்பா

அம்மாவிடம் சொல்லி விடுவேன் என்று சொன்னேன் அப்பொழுது நீ உன் அப்பா அம்மாவிடம் சொல்லி விடுவாயா என்று சொல்லி என் சேலையை இழுத்து அவரது கால்களுக்கு இடையே போட்டு விட்டார். என் அப்பா அங்கு வந்தவுடன் என் சேலையை முழுவதும் உருவிவிட்டு , ஜாக்கெட்டையும் கிழித்து விட்டார், அருகில் இருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள். எதிரி என் அப்பாவையும் கையால் அடித்துவிட்டார்.

3. அன்றைய தினமே நான் புகார் கொடுக்க கடமலைக்குண்டு காவல் நிலையம் சென்றுவிட்டேன். புகாரினை போலீசார் எடுக்கவில்லை. மறுநாள் எங்கள் ஊருக்கு அருகே ஆட்டிற்கு குலை வெட்டுவதற்காக என் அப்பா சென்றார் அப்போது அழகர், ராமுத்தாய், செல்வம், சுந்தரலிங்கம் ஆகியோர் சேர்ந்து அடித்து என் அப்பாவின் தலையில் காயத்தினை ஏற்படுத்திவிட்டார்கள்.அருகில் இருந்த அய்யனார் என்பவர் பார்த்துவிட்டு அருகில் இருந்தவர்கள் மூலம் எனக்கு தகவல் சொன்னார்.

4. காயம்பட்ட என் அப்பாவை க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். அன்றைய தினமே நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் அளித்தது தான். **புகார் மனு அசா.ஆ.1.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – வாய்ப்பளித்தும், குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.07.28 17:51:29 +0530

Judicial Magistrate,
Andipatti.